செய்தி வெளியீடு எண்.124 நாள் 28–2–2007

# மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கருத்து.

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை பெரிதும் விவசாயிகள், நடுத்தர மக்களை முன் வைத்து தீட்டப்பட்டுள்ளது. குறிப்பாக 50 லட்சம் விவசாயிகளுக்கு புதிய பயிர் கடன் வழங்குவதற்காக 2 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிகள் மூலமாக வழங்க அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கது. தற்போது 200 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை 330 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு 12 ஆயிரம் கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்விக்காக 34 சதவிகிதம் அதிக ஒதுக்கீடு செய்து பள்ளிக் கல்வியை ஊக்குவிக்க 23142 கோடியும், மேல் நிலைக் கல்விக்கு 3974 கோடியும் வழங்கி மாணவர்களின் இடை நிற்றலைக் குறைக்கும் வகையில் ஒரு புதிய உதவித் தொகை திட்டமும் அறிவித்திருப்பது மாணவர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெறும். கிராமப்புற சாலை மேம்பாட்டிற்கு 4000 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது கிராமப் புற மக்களுக்கு பெரிதும் உதவியாக அமையும். ஒரு லட்சம் ஊனமுற்றோருக்கு வேலை தனியார் நிறுவனங்கள் வேலை வழங்க அரசு மானியம் அளிக்கும் திட்டத்தை அறிவித்திருப்பதும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும். அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்க பல்வேறு அறிவிப்புகள் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் கோவை விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மத்திய நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பொதுவாக இந்த நிதி நிலை அறிக்கை இந்தியாவிலே உள்ள பெரும்பாலான மக்களின் நல்வாழ்வை மையமாக வைத்துத் தீட்டப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கையாகும். நிதியமைச்சர் அருமை நண்பர் திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9